1984 பிப்ரவரி 17]

வாழ்கிறவர்கள். அந்தத் தாழ்ந்த இடத்திலே, குடிசையிலே இருக்கிற மக்களை, மேட்டுப் பகுதிக்கு மாற்றுவது என்பது ஒரு முக்கியமான பணி. இதற்காக குடிசை மாற்று வாரியம் சார்பிலும், வீட்டு வசதி வாரியம் சார்பிலும் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியம் பல்வேறு தரப்பினர் களுக்கும் வீடு கட்டித் தருகிறது. ஆனால் இன்றைக்கு ரூ. 3 கோடி அளவுக்கு, தனியாக இப்பொழுது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதியினர்களுக்கு வீடுகள் கட்டுவதற் காகக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலே, குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலே, ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

1982–1983 ஜூன் வரை குடிசைமாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்.

18—(* வினா எண் 20920) திரு. என். வரதராஜன்: மாண்புமிகு சுற்றுப்புற சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரியத்தில் 1982 முதல் 1983 ஜூன் வரை கட்டப்பட்ட வீடுகள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தில் 2,450 வீடுகள் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ளன.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசை மாற்று வாரியத்தின் வீடுகள் சென்னை மாநகரத்திற்கு மட்டும்தான் கட்டப்படு கிறது. தமிழ் நாட்டினுடைய பிற நகரங்களிலும், கிராமப் பகுதிகளிலும் இந்தத் துறையின் மூலம் வீடுகளைக் கட்டு வதற்கு அரசு திட்டம் ஏதேனும் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த குடிசை மாற்று வாரியம் என்பது சென்னை மாநகரத்திற்கு மட்டும் இருந்த நிலையை மாற்றி தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களிலும் இருக்கிற குடிசைகளை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே 16 இடங்களுக்கு அது விரிவாக்கப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் இருக்கிற குடிசை களை மாற்றுவதற்கான வேலைகளை குடிசை மாற்று வாரியம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படுகிற வீடுகள் ஏற்கெனவே இருந்த ரேட்டில் இப்போதும் கட்டப் படுகிற போது போதுமான அளவிற்கு தரமான நிலையில் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த ரேட்டை உயர்த்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தைப் பற்றிக் கேட்கிறார் என்று கருதுகிறேன். குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு விலையில் அந்த வீடுகள் உருவாக்கப்படுகிறதோ அதே விலையில் தரப்படுகின்றன. வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும் தான் 4,000 ரூபாய் என்று இருப்பதை இப்போது 6,000 ரூபாய் என்று மாற்றி இப்போது 4500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது குடிசை மாற்று வாரியம் பணிகளை சென்னை நகரம் தவிர வேறு பல இடங்களுக்கும் விரிவு படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதாக சொன்னார்கள். சமீபத்தில் பெய்த பெருமழையின் காரணமாக தஞ்சையில் குடிசைகளில் வாழ்கிற விவசாயத் தொழிலாளர்கள் வேறு எந்தவிதமான வசதியும் இல்லாத நிலையில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் குடியிருப்புகளை இழந்து விட்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப் பட்ட இடங்களில் இந்த வீடுகளைக் கட்டிக்கொடுத்து, இங்கே வசூல் செய்வதைப் போல சிறிய தொகையை வாடகை என்று வசூலிப்பதற்கு ஏதாவது விசேஷமான செயல்குறிப்பை அரசாங்கம் தயாரிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயத் தொழிலாளர்களை சொல்கிறபோது, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மேட்டு நிலம் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இருக்கிற இடங்களை அங்கே இருக்கிற சில மிராசுதாரர்கள் களத்து மேடாக வைத்துக் கொள்வார்களே தவிர குடியிருப்புகள் கட்டுவதற்கு அந்த இடத்தை தர மாட்டார்கள். ஆகவே குடியிருப்புகள் பள்ளமான இடங்களில் இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலே இந்த இடங்களை மேடாக ஆக்கியதற்கு பிறகு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக தனித் தனியாக வீடுகளை கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. இதிலே இருக்கிற சங்கடம் என்னவென்றால் ஒரே இடத்தில்

1984 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சென்னை நகரத்தில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளைப் பற்றியதாகும். 2450 வீடுகள் 1982–83 ஆம் ஆண்டு ஜூன் வரையில் கட்டப் பட்டிருக்கிறது. எங்கெங்கே முடியுமோ அங்கேயெல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நாம் வீடுகளைக் கட்டிக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். சென்னையிலே இருக்கின்ற குடிசைகளையெல்லாம் ஒழித்துவிட முடியுமா என்பது மிகப் பெரிய கேள்வியாகும். ஆனால் எவ்வளவு அதிகமாகக் கட்டிக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நாம் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கிறோம். போதிய இடம் கிடைக்காதது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் குடியிருக்கும் பகுதிகளை குடியிருக்க தகுதியாக இருக்கும் வகையில் மேம்பாடு செய்வதற்காக திட்டம் போட்டு இருக்கிறோம். இடம் கிடைத் தால், அந்தப் பகுதியில் நிச்சயமாக குடிசை மாற்று வாரியம் மூலம் அதிக வீடுகளைக் கட்டிக் கொடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய இருக்கைக்குக் கீழே யாரோ குடையை வைத்து விட்டுப் போய் இருக்கிறார்கள். இது என்னுடைய குடை அல்ல. (குடையைக் காண்பித்தார்).

திரு. சு. பாலன்: அது என்னுடைய குடை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்குள் குடை எடுத்துக்கொண்டு வரக்கூடாது.

திருப்பத்தூர் தொகுதியில் பனையோலைப் பயிற்சி நிலையங்களை அதிகப்படுத்தும் திட்டம்.

19—(*வினா எண் 20008) திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி வறட்சிப் பகுதியாக உள்ளதால் அங்கு பனையோலைப் பயிற்சி நிலையங்களை அதிகப்படுத்தி சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஏழை மக்களுக்கு வருவாய் கிடைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் கடந்த ஆண்டில் 8 பனை ஓலை பயிற்சி நிலையங்கள் செயல்பட்டன. நடப்பு ஆண்டில் திருப்பத்தூர் தொகுதியில் பயிற்சி நிலையங்களை அதிகப்படுத்தும் திட்டம் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது